# மாணிக்க தீபம்



மண்டைதீவு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த வேளாண் குலத்தோன்றல்

அமரர் உயர்திரு

# கந்தையா மாணிக்கலிங்கம்

## அவர்களது சிவபதப்பேறு குறித்த
## நினைவு மலர்

**24.05.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்டைதீவு திருவெண்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட
நற்குடித் தோன்றல்

அமரர்

# கந்தையா மாணிக்கலிங்கம்

*அவர்களது அமரத்துவம் எய்தியமை குறித்த*

# நினைவு மலர்

**24.05.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

*மாணிக்கலிங்கம் என்ற பெயருக்கேற்ப
நல்ல கணவராய், பாசமுள்ள தந்தையாய்
நல் ஆசானாய் பட்சமிகு பேரனாய்
நல்லறம் செய்து
மனிதருள் மாணிக்கமாய் வாழ்ந்த
எம் தந்தைக்கு இம் மலர்
சமர்ப்பணம்*

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு
09 . 03 . 1922

உதிர்வு
24 . 04 . 2014

அமரர்

# கந்தையா மாணிக்கலிங்கம்

## திதி நிர்ணயம்

சீரோங்கு ஜய வருட சித்திரை பத்தொன்றில்
பேரோங்கு குருவார தேய்பிறை அவிட்ட தசமியில் - பாரோங்க
மண்டையூர் மாணக்கலிங்க தலைமை ஆசான்
கொண்டான்பரமனடி நயந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கருமமாதலால்
கணபதி என்றிடக் கருமமாகுமே

## தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கடையவ னேனைக் கருணையினாற் கலந்தாண்டு
கொண்ட
விடைய னேவிட்டிடுதி கண்டாய் விறல் வேங்கையின்
தோய்
உடையவனே மன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்
கொள்ளே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண்கள் குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன் அடியின் கீழ்
இருக்க என்றார்


## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேசா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தக ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சரிதம்

ஆழி சூழ் இலங்கையின் வடபால் அமைந்த யாழ்ப்பாணத்தின் அருகமைந்த தீவுகள் பலவற்றுள் தலைத் தீவாக விளங்குவது மண்டைதீவு. இன்று அழகு குன்றி, மொழிவிழந்து காணப்பட்டாலும் முன்னர் இக்கிராமம் அழகொளிர்ந்த வாழ்விடம். கடலலைகள் தாலாட்டும் தென்னை, பனை தலையாட்டும். கழனிகளில் செந்நெற் கதிராடும் கமக்காரர் முகத்தினிலே இளநகையோடும் பச்சைப் பட்டாடை போர்த்தது போல் புகையிலைத் தோட்டம். பனி நுகர்ந்த பரவசத்தில் பசுமையாய் புற் கூட்டம், வந்தார்க்கு விருந்தளித்து, வருவிருந்து பார்த்திருக்கும் பண்பமைந்த மக்கள் வாழ்ந்திருந்தனர். சுற்றிவர ஆலயங்கள் நிறைந்த ஊர், ஊர் பறவைகளின் உல்லாசமும் வலசைப் புள்ளினங்களின் வனப்பும் ஆவினங்களின் கனைப்பும் சூழ்ந்து பொலிந்திருந்த சிரபுரம் இது!

இத்தகைய கிராமத்தில் திருவெண்காடு எனும் குறிச்சியிலே சித்தி விநாயகர் ஆலயச் சூழலிலே அமரரின் இல்லம் அமைந்திருந்தது. வீரகத்தி என்பவரின் மகனாக மயில்வாகனமும் அவரின் புதல்வராக அம்பலவாணரும், அம்பல வாணரின் பிள்ளைகளுள் ஒருவராக கந்தையாவும் அமைந்தனர். கந்தையா மாரிமுத்து தம்பதிகளுக்கு பிறந்த பிள்ளைகள் நால்வர் முதற்பிள்ளை இராச பூபதி பின்பு அமிர்தலிங்கம் அடுத்ததாக மாணிக்கலிங்கம் கடைக்குட்டியாக கணேசலிங்கமும் தோன்றினர்.

கந்தையா அவர்கள் பெரும் செல்வம் படைத்தவரில்லை யெனினும் பிள்ளைகளின் கல்விக்கு தகுந்த ஏற்பாடுகள் செய்து கல்வியறிவூட்ட தவறவில்லை. மண்டைதீவு அரசினர் த.க.பாடசாலையில் ஆரம்பக் கல்வியை பயின்ற அமரர் பின்னர் தொடர்ந்து ஏழாலையில் தனது ஒன்றுவிட்ட சகோதரி திருமதி.செல்லம்மா இரத்தினத்தின் இல்லத்தில் தங்கியிருந்து ஏழாலை த.க.பாடசாலையில் சிரேஷ்ட தராதரப் பத்திர (S.S.C) வகுப்புவரை கல்விகற்று தேறினார். பின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார்.

இவரது முதல் ஆசிரிய நியமனம் கம்பளை அட்டபாகை சிங்கள வித்தியாலயத்தில் சிங்கள மொழி பேசும் பிள்ளைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது. அதே பாடசாலையில் தமிழ்ப் பிரிவை உருவாக்கி அதற்கு பொறுப்பாக இருந்து மலையக தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படுத்தினார்.

1953ம், 1958ம் ஆண்டு கலவரங்களின் போது இறையருள் அவரையும் குடும்பத்தினரையும் காப்பாற்றியது. மேலும் இல்வாழ்வில் நற்றுணையாய் அவ்வூர் அருணாசலம் செல்லம்மா தம்பதியரின் புதல்வியான அம்பிகையை 1953ல் கரம்பற்றினார். இருவரினதும் நல்லறத்தில் எழுவர் உதயமாகினர். தலைமகளாய் கேதார கௌரியும், "சாந்தி" என்ற கேதார நாயகியும் பின்னர் முதல் ஆண்மகவாய் கணேசலிங்கமும் அவர் தம்பியாக சசிகாந்தனும் ஐந்தாவது பிள்ளையாக திருலிங்கமும் அவரின் பின் உமாதாரணியும் கடைக்குட்டியாக சிவ காந்தனும் பிள்ளைகளாயினர்.

அமரரின் 13வருட மலையக ஆசிரியப் பணியின் பின் இரண்டாவது பாடசாலையாக மண்கும்பான் அ.த.க.பாடசாலை அமைந்தது. சில வருடங்களின் பின் வவுனியா மாவட்டத்தில் உள்ள மாதர் பணிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்று அதிபராக கடமையாற்றினார். சிறிது காலத்துள் தம் துணைவியாரையும் அப்பாடசாலைக்கு மாற்றம் பெறச் செய்து பிள்ளைகளுடன் வன்னி மண் சூழலில் வாழ்ந்தார். அங்கு தமிழ் மொழித்தினப் போட்டிகளில் மாணவர் களை பயிற்றுவித்து மாகாணமட்டம் வரை சென்று பரிசில்களும் பெற வைத்தார்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் தமது சொந்த ஊருக்கு இடமாற்றம் பெற்று வந்து மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் ஆசிரியப் பணியை தொடர்ந்தார். அங்கு தலைமை ஆசிரியர் பொறுப்பையும் ஏற்று பாடவிதான, இணைப்பாட விதான செயற் பாடுகளில் அக்கறையுடன் கருமமாற்றினார். இவர் காலத்தில் உயர்தர கலைப்பிரிவும் பாடசாலையில் தொடங்கப்பட்டது.

ஒரு கமக்காரரின் மகனாகப் பிறந்து ஆசிரியராக அவர் மிளிர்ந்த போதும் கமத்தொழிலில் மிகுந்த ஈடுபாடு உள்ளவராக இருந்தார். தோட்டத்தில் புகையிலை, மிளகாய் செய்கையிலும், வயலில் நெற்பயிரிடலிலும் தமது பிள்ளைகளின் உதவியுடன் அமரர் விருப்புடன் ஈடுபட்டார். குடும்பத்தினரின் பாலுணவுத் தேவைக்காக பசுக் களையும், ஆடுகளையும் பரிவுடன் வளர்த்தார். இளைய மகள் உமாவின் இழப்பு அவரை வேதனையில் ஆழ்த்தியது. காலம் அவரது மனக் காயத்தை ஆற்றுப்படுத்த கடமையைத் தொடர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக இருவருட சேவையின் பின் தன் துணைவியுடன் ஓய்வைப் பெற்றுக்கொண்டார். மண்டைதீவு மகாவித்தியாலய சமூகம் அவர்கள் இருவரையும் மாலை மரியாதை மங்கல இசையுடன் சேவை நலன் பாராட்டி கௌரவித்தனர்.

ஓய்வின் பின் தோட்டத்திலும், வயலிலும், சமூகப் பணியிலும் தமது பெரும் பொழுதைச் செலவிட்டார்.

சமயச் சடங்குகளிலும் இறைவழிபாட்டிலும் மிக்க ஈடுபாடு கொண்டவர். திருவெண்காடு சித்தி விநாயகரையும், முகப்புவயல் கந்தசுவாமி தெய்வத்தையும் வழிபட்டு வந்தார். முகப்பு வயல் கந்தனின் தேர்த்திருவிழாவை தன் முன்னோர்களின் மரபுரிமையை பேணி நடாத்தி வந்தார். பிள்ளையார் கோயில் திருப்பணிச் சபையில் அங்கத்தவராக இருந்து நீண்டகாலம் தொண்டாற்றினார். இணக்க சபையின் மத்தியஸ்த உறுப்பினருள் ஒருவராக இருந்து சமூகப் பணியாற்றினார். வீண் சோலிக்கு சென்றதில்லை வெட்டிப் பேச்சில் பொழுதை கழித்ததில்லை.

இவரது பிள்ளைகள் ஆசிரியர்களாகவும், வெளிநாட்டிலும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். மருமக்களையும் தமது மக்களாக நேசித்தவர், பேரப்பிள்ளை களிடமும் பேரன்பு கொண்டவர் உறவினருடன் அன்புருகப் பழகுவார். பகைக்கு இடம் கொடுத்து வாழ்ந்தவரில்லை.

1991ல் யுத்த சூழலில் மண்கும்பானுக்கு குடும்பத்தினருடன் இடம் பெயர்ந்து சிறிது காலம் இருந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பினார். மீண்டும் இடம் பெயர்ந்து கொக்குவிலில் வாழ்க்கை கழிந்தது. 1995ல் மாபெரும் இடப்பெயர்வில் கொழும்பு சென்று தனது மூத்த மகளுடன் மோதரையில் வாழ்ந்து வந்தார். 2012ல் பக்கவாத நோய்க்கு ஆளானார். அன்றிலிருந்து படுக்கையிலேயே அவரின் நாட்கள் கழிந்தன. 2014 தையில் தந்தையை கொழும்பில் இருந்து அழைத்து வந்து தனது கவனிப்பில் வைத்திருந்து பராமரித்தார் இளையமகன் திருலிங்கம். வலியது விதி எனும் வாசகத்திற்கிணங்க மனைவி பிள்ளைகள் சுற்றத்தாரைப் பிரிந்து 2014 சித்திரை 24ல் மாலை 4 மணியளவில் திருவெண் காட்டுறை தெய்வத்திடம் சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றம்

வாழ்விது தான் நிலைக்காது வந்து காலன் – உயிர் கொள்வான்
மாலன் அறிவதெல்லாம் யாமறியோம் மயங்கி நிற்போம்
கோனெனினும் குருடெனினும் விதிப்படிதான் உயிர் தரிக்கும்
சாலப் பெருந்துயரெனினும் சா தடுக்க யாரறிவார்

## வேறு

நுதலழகு விபூதியிலே நோக்கும் பார்வை சாந்தமதே
தேசிய உடை மேலே வெள்ளை வேட்டி சால்வை அழகே
கறுத்த மேனி ஒல்லி உடல் நரை வராத சிகை தகுமே
படித்த உயர் பண்பாளன் மாணிக்கலிங்கம் தாமே

காலை வேட்டி சால்வையுடன் கற்பித்தலில் கண்ணாய் – வரும்
மாலையிலே மண்வெட்டி கலப்பையுடன் மணல் வயலில்
பின்பு மார்கழியில் கொத்தி நிலம் பண்படுத்தி பயிரிட்டு
காசு தரும் புகையிலையும் மிளகாயும் கழிந்தனவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புடைய மனிதர்

மனிதர்கள் பிறக்கிறார்கள். இறக்கிறார்கள், அது இயல்பான ஒரு நிகழ்ச்சிதான் ஆனால் சில மனிதர்கள் மாத்திரம் அவர்களது இறப்புக்கு பின்னரும், அவர்களை புரிந்து கொண்டோர், அவர்களுடன் பழகியவர்கள், இனிய உறவுகள் போன்ற பலரது நெஞ்சங்களில் நிலைத்து வாழ்கிறார்கள் அதற்குக் காரணம் குறிப்பிட்ட மனிதர்கள் தாம் வாழ்ந்த சமூகத்துடன் தங்களது இனிய குணாம்சங்களாலும், நடத்தைகளாலும் ஏற்படுத்திக் கொண்ட நல்லுறவுதான். அத்தகைய நிலைபெற்ற மாண்புடைய மனிதர்களில் ஒருவராக அமரர் மாணிக்கலிங்கம் வாழ்ந்து காட்டியுள்ளார்.

நல்ல ஆசிரிய மனைவி, இனிய பிள்ளைகள் ஏழுபேர். பெற்றோருடன் பிள்ளைகள் மூவரென ஐந்துபேர் ஆசிரியர்கள் இரண்டு ஆண் மக்கள் புலம் பெயர்ந்து வாழுதல் ஆகிய சிறப்புகளால் ஏற்றம்பெற்ற மண்டைதீவுச் சிற்றூரின் அழகிய இல்லறம் வாத்தியாருடையது. அண்ணன், அக்கா, தம்பி எனப் பிறந்தகத்துப் பெருமையுடன் ஏராளர் குடும்பத்தில் கல்வியினால் உயர்ந்து ஆசிரியராகி, தலைமையாசிரியராகி, சுமார் முப்பத்தைந்தாண்டு கள் கம்பளை, மண்கும்பான், மாதர் பணிக்கர் மகிழங்குளம், மண்டைதீவு என்றவாறு பல இடங்களில் ஆசிரியப் பணியாற்றி 1984இல் இளைப்பாறிய பெருந்தகை அவர்.

உறவினரான அம்பிகை ஆசிரியை இல்லறத் துணையாகக் கிடைத்தது அவருக்கான இன்னுமொரு நற்பேறாகும். "நல்ல மனைவி, நல்ல பிள்ளை, நல்ல குடும்பம் தெய்வீகம்" என்பதற்கிணங்க வாழ்ந்து முடித்தபோதும் ஊரவர்கள் அயலூரவர்கள், உறவினர்கள் மத்தியில் அவர் என்றைக்கும் வாத்தியார் தான். 1990ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமைகள் காரணமாக ஊரினைப் பிரிந்து தமது பெண் பிள்ளைகள் இருவருடனும் (ஆசிரியைகள்) கொழும்பில் வசிக்க வேண்டிய சூழ்நிலை அவருக்கு ஏற்பட்டது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கந்தரோடையில் வசிக்கும் மகனைப் பார்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரவர்களைச் சந்திக்கவும் அடிக்கடி வந்து போனார். ஆயிரம் பிறை கண்டுவிட்ட வாத்தியார் தம்பதியினர் ஆசிரியத்துவத்தினாலும் இல்லறத்தினாலும் மகிமை பெற்றவர்கள். அவர்கள் சொந்தவூரான மண்டை தீவின் பெருமைக்குரிய ஆளுமைகளாக விளங்கியவர்கள். பல நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கியவர்கள். வாத்தியார் பல்வேறு சமூகப் பொதுப்பணி நிறுவனங்களில் இணைந்து பணியாற்றியவர் தமிழ் தேசியத்தில் பற்றுறுதி கொண்டவர்.

இரண்டு தசாப்தங்களாக மண்டை தீவு மகாவித்தியாலயத்தின் அதிபருக்கு அடுத்த நிலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றியவர். ஊரவர் இன்ப துன்பங்களில் இணைந்து கொண்டதுடன் பிணக்குகளைச் சரிசெய்யும் பேராளராகவும் திகழ்ந்தவர்.

வாத்தியாரின் அயலூரான அல்லைப்பிட்டிக் கிராமம் எனது சொந்த ஊராகும். மண்டைதீவு அல்லைப்பிட்டி மக்களிடையே இரத்த உறவு நிலைத்திருந்தது. எனது உறவினர் பலர் மண்டைதீவைச் சேர்ந்தவர்கள். எனக்கு புத்தி தெரிந்த காலத்திலிருந்து மாணிக்கலிங்கம் வாத்தியார் சிவப்பிரகாச வாத்தியார் ஆகிய இரு ஆளுமைகள் பற்றி அறிந்து, பின்னர் அவர்களுடன் பேசிப்பழகி அதன் பின்னர் எங்கு கண்டாலும் "என்னடா திருஞா" என முதுகில் தட்டிக் கேட்கக்கூடிய அன்புறவாக அது மலர்ந்தது. நான் முதன் முதல் ஆசிரிய உத்தியோகம் பெற்று வவுனியா மாவட்டத்திலுள்ள மாதர் பணிக்கர் மகிழங்குளம் அ.த.க.பாடசாலையில் பணியாற்றச் சென்ற போதுதான் மாணிக்கலிங்கம் வாத்தியார் அங்கு மூன்றாண்டுகளுக்கு மேலாகத் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய விடயம் ஊரவர்களால் தெரிய வந்தது. அவர் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கையும் அன்பும் வாத்தியாரின் அணுகுமுறையை அந்தப் பின்தங்கிய குடியேற்றக் கிராமத்தில் எடுத்துக் காட்டியது. வாத்தியாரின் நண்பராக அங்கு இருந்த தம்பு என்பவர் அடிக்கடி வாத்தியாரைப் பற்றிக் கதைப்பார்கள். அந்தச் செய்தியை வாத்தியாருக்கும் நான் சொல்வேன். ஒருமுறை தம்பு அவர்கள் கடுமையாக நோயுற்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இருந்தபோது வாத்தியார் அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பார்த்துப் பண உதவியுடன் உணவும் கொடுத்து உபசரித்தார். என்றைக்கும் மாறாத கெழுதகை நட்பாக அதனைக் கண்டேன். வாத்தியார் படா டோபங்களற்ற எளிமையான மனிதர். தமிழாசிரியர்களுக்கான அந்தக் காலத் தேசிய உடையில் வெள்ளைவேட்டி, நஷனல், சால்வை, அணிந்து எப்போதும் காணப்படுவார்.

1990களின் இடப்பெயர்வு ஊரவர்கள் எல்லோருக்கும் பெருந்துயர் விளைவித்தது. மனமின்றியே கொழும்பில் வாழவேண்டியிருந்தது வாத்தி யாருக்கு. அவரது மகன் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் உப அதிபராக கடமையாற்றுகின்றார். மூத்தமகள் இளைப்பாறிவிட்டார். இளைய மகள் கொழும்பில் முஸ்லீம் பாடசாலையொன்றில் கற்பிக்கிறார். மகன் இருவர் வெளிநாட்டில் வசிக்கின்றனர். எதுவித குறையுமில்லாவிடினும் இறைவனின் சோதனை பாரிசவாத நோயினால் தாக்குண்டவாத்தியார் படுக்கையில் கிடக்கவேண்டியேற்பட்டது. மகளும் மருமகனும் அவரை நன்கு பராமரித்தார் கள். துணைவியார் அருகிருந்தார். இரண்டு மாதங்களுக்கு முன்னரே அவரை கந்தரோடையிலுள்ள மகன் வீட்டுக்குக் கொண்டு வந்தார்கள். அவரது இறுதிக் காலத்தில் பணியாற்ற மகனுக்கும் கொடுத்துவைத்தது விதி வலியதல்லவா தமது 92வது அகவையில் உயிர்நீத்த மாணிக்கலிங்கம் வாத்தியாரின் நினைவுகள் எம்மை வழிநடத்தக்கூடியவை, நெஞ்சில் நிறைந்தவை. அவரது நீண்ட வாழ்க்கை பல படிப்பினைகளைத் தருபவை. எவரையும் அன்போடும் பண்போடும் அரவணைத்து வாழக்கூடிய சமூக உத்தியை முன்மாதிரியாக காட்டுபவை. அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரம்பொருளை இறைஞ்சுகின்றேன்.

**கலாநிதி செ.திருநாவுக்கரசு**
**அல்லைப்பிட்டி - 1**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைவியின் துயரம்

என்னவரே என துயிரே ஏதிலியாய் ஆனேன் நான்
மன்னவரே மறக்கவொன்னா மதிமுகத்தை இழந்தேன் நான்
பின்னரும் இப்பாவி உயிர் வாழுகின்றேன் தாழவில்லை
அந்நகரின் அழைப்பு வந்தால் ஆவி உட(லி)ல் தரிப்பதில்லை

"அருள"கத்தின் நாயகரே இருளகற்றி வாழ்ந்தவரே
பொருள் சேர்த்து புகழ் சேர்த்து பெருவாழ்வு எய்தவரே
ஏற்றமிகு வாழ்வளித்து எனையாண்ட பெருமானே
கூற்றுவன் வந்துயிர் கவர்ந்தான் தேற்றமில்லை என்துயர்க்கு

பொட்டிழந்து பூவிழந்து பொற்றாலி நானிழந்து
பெற்ற துயர் அறியீரோ பெருமனதாய் வாரீரோ
மட்டில்லா மதிப்பு வைத்து மானிலத்தார் போற்றுகின்றார்
விட்டெங்கு போனீர் எனை திக்கற்ற காட்டினிலே.

நீண்ட மண வாழ்வினிலே நிறைந்த வள வாழ்வளித்தீர்
நீதி வழுவாதிங்கு நேர்மையாய் கடன் புரிந்தீர்
ஆசிரிய பணிக்கோர் அணி கலனாய் விளங்கி நின்றீர்
அம்மா அம்மாவென்றழைத்திருந்து ஆவி பிரிந்து சென்றீர்

பட்ட மரமானேன் பரிதவித்து நானழுதேன்
விட்டகன்ற மாயமென்ன வெம்புகிறேன் இன்னும் நான்
பெற்ற பிள்ளைகளும் சுற்றமும் பொருமியழ
விட்டேகி சென்றதுவும் விநாயகன் கழல் தானே

**மனைவி**

## மருமக்கள் சோகம்

பாசமிகு மாமாவே பரிதவிக்க வைத்ததென்ன
நேசமிகு மாமாவே நீண்டவழி சென்றதென்ன
வாசமிகு மலரனைய வாழ்வு கண்ட மாமாவே
சூலமிகு வைரவன் தாள் துணை எனவே சென்றீரோ

**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகள் சொல்லும் துயர்

பெற்றவளின் துணையுடன் எமைப் பேணி நலம் காத்தீர் –நாம்
கற்றவரின் மத்தியிலே நிற்பதற்கும் வழி செய்தீர்
உற்றவர் உறவினரை உவந்து விருந்தளித்தீர்
நற்றவமாய் வாய்த்த நம்மினிய அப்பாவே

மக்கள் எமைப் பெற்றெடுத்து மாண்புறவே கல்வி தந்து
பற்றுடனே வளர்த்து வந்தீர் பாசமுள்ள அப்பாவே
சுற்றிவர பகையுமில்லை சோதனையாய் வாழ்வு இல்லை
மத்திய தர குடும்பத்திலே மகிழ்வுடனே சிறு பராயம்

விளக்கொளியில் படிந்திருந்தோம் விடிகையிலே விழித்தெழுவோம்
பயரிடலில் உதவி செய்தோம் அறுவடைக்கும் அருகிருந்தோம்
முகப்பு வயல் தேர் நாளில் நடுச் சாமம் நெருங்குகையில்
எடுத்து வந்து வண்டிலிலே எமக்களிப்பீர் பிரசாதம்

கல்விகற்ற வேளையிலே காலனவன் பார்வையிலே
பட்டதெங்கள் உடன்பிறப்பு பரிதவித்தோம் எல்லோரும்
பெற்றவர் நீர் மதிகலங்கி பின் தேறி எமை வளர்த்தீர்
உற்ற விதி உரைத்தபடி உலவுகின்றோம் நிசம்தானே

இடம்பெயர்ந்து புலம் பெயர்ந்து சிதறிநின்றோம் இகமதனில்
வடமிழந்த தேரானோம் அப்பாவின் பிரிவினிலே
உயிரிழந்து போனாலும் உடலழிந்து போனாலும்
நினைவினிலே கொண்டிருப்போம்
நெஞ்சினிலே உமை சுமப்போம்

**பிள்ளைகள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறாமக்கள் துயர் பகிர்வு

பெரியப்பா என்றழைத்து பெரிதுவக்க நாமிருந்தோம்
சரி – தப்பு சொல்லித்தர தரணியிலே தலை நிமிர்ந்தோம்
கழனியிலே தோட்டத்திலே கடுமுழைப்பு கண்டிருந்தோம்
கார் நிறத்து பெரியப்பா யாரழைக்க விண் சென்றீர்

திருநீறு நெற்றியிலே சந்தணமதன் மத்தியிலே
செவிக்கினிய கீதம் வரும் தேவாரம் இசைக்கையிலே
வேட்டியுடன் நஷலணிந்து வேளைக்கு பள்ளியிலே
விருப்பமுடன் கற்பித்த நிகழ்வெண்ணி வியக்கின்றோம்

புலம் பெயர்ந்த வாழ்க்கையிலே பொழுதெல்லாம் வேலையிலே
உறவுகளை எண்ணிடுவோம் உங்களையும் நினைத்திடுவோம்
கடுகிவந்த காலனவன் உயிர் கவர்ந்து சென்றானே
கலங்கி நாமஞ்சலியாய் கண்ணீரை சமர்ப்பித்தோம்.

**பெறாமக்கள்**

## பேரன் பேர்த்தி

அப்பப்பா என்றழைக்க அருணனும் தேடிவர
அப்பப்பா என்றழைத்த ச்ங்கீத் தினேஸ்கதறியழ
அப்பப்பாவுடனிருந்த ஆது, பிரி, சாரு அழ
அப்பப்பா சென்ற இடம் ஆரறிவர் கூறிரோ

அப்பப்பா எங்களுக்கு கதை கூற மகிழ்ந்திருந்தோம்
அப்பப்போ நித்திரைக்கு தோள் சாய்த்து துயின்றிருந்தோம்
அப்பாவின் அப்பாவே ஆரெமக்கு உங்கள் போல்
தப்பாமல் சாமி பதம் சேர்ந்ததனை – நாம் உணர்வோம்.

**பேரன் பேர்த்திமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள அப்பா வணக்கம்

அப்பா, அப்பா என்றழைத்திடவே
நீங்களின்று இல்லையப்பா எனினும் சிலவரிகள்
வரையறை செய்யப்பட்ட வருவாய்க்குள்
நிறைவாய் எமை வளர்த்தீர்
குறைவிலாக் கல்வியை கொஸ்ரலில்
விட்டல்லோ படிக்கவைத்தீர் நல்
ஒழுக்கமும் கொள்ளவைத்தீர்

சிங்காரி தான் காவேரி...
தலைவாரிப் பூச்சூடி உன்னை
போன்ற பல பாடல்களைப்
பாடி அபிநயித்துக் காட்டியது இன்றும்
என் மனத்தினில் தெரிகிறது

பள்ளியில் கற்பித்தும், மாலையில்
கழனி தோட்டம், துரவு, என்றும்
கோயில் சமூக சேவை என்றும் நாளெல்லாம் பாடுபட்டீர்
நோயுற்ற போதும் நோயினால்
நொந்து போகவில்லை – நீங்கள்
பாயுற்று பாரமாகிவிட்டேனே என்றுதான்
மனக்காயம் பட்டீர்கள்
அப்பா, ஆறாது, ஆறாது அழுதாலும் தீராது
ஆறுமுகன் அண்ணல் சித்தி விநாயகரின்
திருவடி சேர இறைஞ்சுகின்றோம்

**அன்பு மகள்**
**சாந்தி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வான்மதியும் ஞாயிறும் உள்ளவரை
## நின் புகழ் வாழ்க

காலப் பெரும் கடலின் ஆழப்
பெரும் சுழலின் மாயச் சுழிப்பில்
மாளாத துயர் தந்தே என்றும்
மீளாத துயில்போனவரே தூய
தமிழ் மொழியின் பேராசானே
மாணிக்க லிங்கம் நாமத்தவனே
மாண்டனையோ நீயும் வந்து
நான் ஒருகால் காணாதே!

அன்ன சத்திரம் அமைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டுதல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்
என்றாங்கு செப்பினன் கவிஞன்!
பாரதியின் தமிழ் பேசும் நாவலனே
நான் வந்து பார்த்துப் பேசாதிருக்க
நீண்டகனாக் கண்டனையோ நீயும்!

ஏழ்மையானவரின் கல்விக் காதலனே
துளியும் பொன்றாத வெண்சங்க நாதமே
பளிக்கும் வெண்மையின் உடை தாங்கும்

அளிக்கும் அற்புதமான கல்வியாளனே
ஒளிதந்து கல்வியின் விழிதிறந்தவனே
தெளிந்த ஞானச் செருக்கின் விளக்கமே
கிளிந்தோடும் கங்கை சடைதாங்கிய சிவன்
விழியாலே அயில் எரித்தான் தாழ் சேர்ந்ததென்ன விரைந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைதீ வெனுமோர் சுந்தரதீவு
விண்கொண்டோரும் வியந்துவரும்
கண்கண்ட சந்திர வனம் காணும்
பண்டுதொட்டு செந் நெல் விளையும்
மண் கொண்டதோர் மரகதத் தீவில்
தண்பொழில் சூழும் நன்நீர் வாவி சேர்
திருவெண்காடு பதியுறையும் காரானை
முகத்தோன் கணபதி கோவில் காணீரோ

தேவரும் வந்து வணங்கும் சூழலில்
தெய்வீகம் சிறக்க தேவியரும் வருவர்
கல்வியும் ஞானமும் ஒன்று சேரும்
கந்தையா பெரியோன் பெற்ற பெரும்
செல்வமகன் மாணிக்கலிங்கன் தரம்
பெற்ற தலைமை ஆசிரியன், அதிபன்
தலைமை தாங்கும் பண்பாளன் தான் தலைவனென
பெருமை பேசான் தொண்டு செய்து சேர்ந்தனையோ!

ஆலயம் நிறையுமிடமெலாம் தொழுகையில்
அவரைக்காணலாம் மாலை வேளையில்!
காலையில் இளநேர பயிற்சியில் தலைமை
காணலாம். பாடசாலையின் முகப்பில்!
இணக்கசபையின் இணையிலாதீர்ப்பாளன்
இளைஞர் விளையாட்டு கழகத்தின் ஆலோசகன்
வான்மதி இளைஞருக்கொரு வழிகாட்டி
வான்மதியும் ஞாயிறும் உள்ளவரை நீவாழி

சிந்துகவிபாடும் தெம்மாங்கிசைக்கும்
மங்காத பெருங்கடலின் இசைஓசை
அலையோசையாய் "ஓம்" சொல்லும்
ஓடைகளும் காடுகளும் நிறைந்து
கத கதவென சல சலத் தோடும்! எங்களது
ஊர் தீவகத்தின் தலைவாசல் பாரீர்!
தலைசாயா தமிழ் பெருங் கவிஞன் ஈழ
மோகன் அமிர்தலிங்கன் தம்பியுமானாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியத்தில் நாடகத்தில் காதலென்றால்
ஆகாவென போற்றும் இவ்வுலகம்
ஊரகத்தே வேலி ஓரத்தில் கிணற்றடியில்
காதலென்றால் ஆகாதென வேத மோதும்
தம்பி ஒருத்தன் கணேசலிங்கம் இருந்தான்
காவிய காதலின் நாயகனும் அவனேயானான்
வெம்பியழவைத்தே வேதனைக்கும் ஆளானான்
சகோதரி ஒருவரோடு நால்வர் ஆநீரே!

நல்ல தமிழ் பேசும் நம்மூரின்
குலமகள் நல்லாள் கல்வி அறிந்தாளை
தங்க மகளாம் ஆசிரியை அம்பிகையை
மங்கல நாண்பூட்டி கைப்பிடித்து
மங்காத நன்மக்களை பெற்று நீர்
நிறைந்த வாழ்வும் குறையாத செல்வமும்
கொண்டு நிமலன் தாழ் சேர்ந்தீர்! ஐயா
பத்தாண்டு பணிசெய்தோம் இணைந்தே!

முடி சான்ற மன்னரும் முனிவரும்
அடி சாரா ஞானியரும் அறிஞரும்
அறம் சான்ற பெரியோரும் வீரமும்
மறம் கொண்டு விடுதலைப் போர்
திறம்பட புரிந்தோரும் புலவரும் நீரரும்
இறைவனடி சேர்தல் இயற்கையன்றோ!
சொந்தமும் சுற்றமும் மக்களும் நலம்
சேர்ந்திருக்க அஞ்சலித்தேன்!! சாந்திகொள்க

**கை.பேரின்பநாயகம்**
***ஓய்வு நிலை அதிபர் மண்டைதீவு.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கலிங்கம் ஐயாவுக்காக மாணவனின் இரங்கல் பா

யாழ் மண்ணில் பிறப்பெடுத்து
யாழினும் இனிய தமிழ் கற்று
வாழ்நாளில் மலையகம் கண்டு – எம்மை
வளர்த்துவிட்ட ஐயா மாணிக்கலிங்கமே
பாழ்பட்டிருந்த பள்ளிக் கூடங்கள் – தங்கள்
கால் பட்டு ஒளி பெற்றது
தாழ் போட்டிருந்த எம் மனங்கள்
தாராளமாய் திறந்து வளர்ந்தது

மண்டைத் தீவை மறவாமல் – எம்
அண்டை அட்டபாகையை வளர்த்தவர்
சங்கத் தமிழொடு வளர்ந்திடவே – அயல்
சங்குவாரியிலும் தமிழைக் காத்தவர்
திண்ணைப் பள்ளி வாழ்வை மாற்றி
திறம் அதிபர் ஆசிரியர் கண்டீர்கள்
கண்ணை இமையது காப்பது போல் – கன்னி
அம்பிகையின் நலம் காத்தீர்கள்

அரச தொழிலைப் பெற்றாலும் – திறனே
அருமை விவசாயம் பார்த்தீர்கள்
நிறைந்த வெற்றிகளைப் பெறவே
முனைந்து பணியை செய்தீர்கள்
புருஷ லட்சணமாம் பிள்ளைகளை
புலமையோடு பெற்றீர்கள்
மனுஷ வாழ்வை உயர்த்தியதால்
மலையகத்தில் புகழ் பெற்றீர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு நீங்கள் கண்டாலும் – உங்கள்
உறவு எம்மைத் தொடர்ந்ததுவே
சாய் கதிரையில் அமர்ந்தாலும்
சரித்திரமானது உங்கள் புகழ்
காலத்தை வென்றீர்கள் கலங்காது
காலனிடம் கை கோர்த்தீர்கள் – தயங்காது
அழியாத ஆன்மா சாந்தி பெற
நிலையான இறைதாழ் வணங்குகிறேன்

மலையகத்தின் நிலையுயர்த்தி மாணிக்கமாய்
தலை சிறந்த ஆசானாய் – கலை யுலகில்
தரம் கண்டு, குறை கண்டு, நிறை கொண்டு போதித்து
தரமான கலங்கரை விளக்கமுமானாய்!
நல்லோர் பாரினிலே யாருண்டு உன்போல்?
நல்லறிவு தந்த ஆசான் மாணிக்கலிங்கம் ஐயா,
தலை சாய்த்து, கண்ணீர் மல்கி, மலர் தூவி
பணிகின்றேன் உம் திருவடியில் இன்று.

மாணிக்கலிங்கம் ஐயா அவர்களே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நாவல் நகர் ஸ்ரீ முத்துமாரியம்பாள் தாழ் பணிந்து வணங்குகிறேன்

மாணவன்
**க. சுப்பிரமணியம் – J.P**

முன்னாள் க/கதிரேசன் கல்லூரி அதிபர்
கௌரவ நகர சபை உறுப்பினர்,
நாவலப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபங்கள் ஏற்றிய மாணிக்க தீபம்

உலாகளாவிய ரீதியில் ஆசிரியம் ஓர் உயர் தொழில் அந்தஸ்தினைப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. எதிர்கால சந்ததிகளாகிய மாணவர்களுக்கு தெளிந்த உள்ளம், சிறந்த ஆளுமை, தேர்ச்சி வெளிப்பாடுகள், ஒழுக்கம், விழுமியம் ஆன்மீக நாட்டம் என்பவற்றை ஏற்படுத்துபவர் ஓர் சிறந்த ஆசிரியர் ஆவார். அந்தவகையில் மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் நல்ல ஆசானாகவும் உப அதிபராகவும் கடமையாற்றிய அமரர் திரு.கந்தையா மாணிக்கலிங்கம் ஆசிரியர் அவர்கள் இதற்கோர் உதாரணமாக விளங்கினார்.

தமிழ் பண்பாட்டுக்கு உரித்தான "வெள்ளைவேட்டி, வெள்ளை நஷனல்சேட், மடிப்புக்குலையா உத்தரியம், நெற்றியில் வெண்ணீறு இவைநடுவே பொன்னின் குடத்திற்கு பொட்டிற்றாற்போல் நீழ்நுதல்தனில் சந்தணப் பொட்டு, கறுப்புக் கண்ணாடி, என புன்சிரிப்பில்" அவர் வகுப்பறைக்குவரும் காட்சி எம்மனதில் அழியாத சுவடாக பதிந்துள்ளது. ஆசிரியர் அவர்கள் தமிழைக் கற்பித்தார், தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகளை நடாத்தினார், இந்து சமய நெறியின்பால் நின்று அதனை நிலைநிறுத்தும் நிகழ்ச்சிகளை நடாத்தி யும் அதன்படி நடந்தும் வாழ்ந்தும் காட்டினார்.

பாடசாலை நவராத்திரி விழாவின்போது ஏடுதொடங்கியவரும் இவரேயாவார் இவர் விரல்பிடித்த மாணவர்கள் கல்விமான்களாகவும் புத்தி ஜீவிகளாகவும் வாழ்ந்துவருகின்றனர். ஆசிரியர் அவர்களுக்கு ஏர்பிடித்து உழவும் தெரியும் ஏடெடுத்து கற்பிக்கவும் தெரியும். நகைச்சுவையுடன் பல உதாரணக் கதைகளும் கூறி மாணவர்களுக்கு பாடம் புகட்டுவதிலும் வல்ல வர். தான் கற்கும் காலத்தில் தோட்டத்திற்கு கூட்டெருவை ஏற்றிய மாட்டு வண்டியின் ஆசணத்தட்டிலிருந்து மாட்டையும் விரட்டி கம்பனின் பாட்டையும் புரட்டிய கதைசொல்லி மாணவர்களுக்கு கல்வியின் மகத்துவத்தை உணர்த் தியவர். தாயானவர் தன்பிள்ளைகளை கருவில் சுமக்க தந்தையானவர் அக் கருவை தன் நெஞ்சில் சுமந்து அன்பாக வளர்த்தெடுத்து நல்லறிவூட்டி கல்வி யில் சிறக்கவைத்து நல்ல நிலைமைக்களாக்கிய தகப்பன்சாமியும் இவர்.

மரணமும் ஜனனமும் இயற்கையின் நியதியே. மரணம் என்பது உடலுக்கு மட்டும்தான் உயிருக்கு அல்ல அவர் ஏற்றிய தீபங்கள் நினைவு களாக என்றும் சுடர்விட்டு எரிந்தகொண்டே இருக்கும். எனவே ஆசிரியரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திருவெண்காட்டு சித்திவிநாயகரை பிரார்த்திப்போமாக...

"பிறப்பவர் யாவரும் இறப்பவர் எனினும் சிறப்புயர்வுள்ளோரே
சிந்தையில் உறைவார்"

**திரு.முத்துலிங்கம் இராஜகோபால்**
*செயலாளர், பிரதேச சபை, வேலணை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமை சேர்த்த உத்தமர்

ஈழமணித்திருநாட்டின் வடக்கே தலைமுடி மகுடமென மிளிரும் யாழ்ப்பாணத்தின் முதல் தீவாகவும், சப்த தீவுகளின் தலைத்தீவாகவும் அமைந்த மண்டைதீவின் திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் சூழலில் புகழ்பூத்த உயர் சைவ வேளாண் பெருங்குடியில் தோன்றிய கந்தையா – மாரிமுத்து தம்பதியினருக்கு வரமாய் வந்துதித்த தவமகன் மாணிக்கலிங்கம். அவர்கள் நிமிந்தநடை, புன்சிரிப்பு, நேர்கொண்ட பார்வை நெற்றியில் மூன்று குறி, குறிமேல் அழகிய சந்தனப்பொட்டு அவற்றுக்கும் மேலாக உயர் கல்விகற்று தலைமை அதிபர் பதவி இவையாவும் நிறைந்த சிவசாயலுடன், தூய வெண்ணிற தேசிய உடையுடன் இப்பூவுலகில் நடமாடிச் சைவத்தையும், தமிழையும் வளர்த்தவராவார்.

அன்னாரது திடீர் மறைவு உறவுகளை, அன்பு உள்ளங்களை, கடமைகளை எதிர்பார்த்திருந்தவர்களை எல்லாம் மாறாத சோகத்தில் ஆழ்திவிட்டது.

இப்புவியில் மக்களும், ஏன்! சகல உயிரினங்களும் தான் தாம் தாம் செய்த கருமவினைகளுக்கேற்ப ஏதோ ஓர் உடம்பைப் பெற்றுப் பிறக்கின்றன. ஆனால் அவை என்றோ ஒருநாள் இறப்பது உறுதி, இது இயற்கையின் நியதி, அது முடிந்த முடிவு எனினும் இதன் வேதனை அவரைச் சாந்தோற்கு தண்டனையாகின்றது.

இவரின் பரம்பரை ஊர் ஆலயங்களின் அருகில் வாழ்ந்தமையால் தொடர்ந்து அந்த ஆலயங்களின் திருப்பணிகளிலும், உற்சவகாலங்களிலும் முன்னின்று கடமை களை நிறைவேற்றியுள்ளனர். அந்தவகையில் அமரரும் திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் மஹோற்சவ சபை தலைவராகவிருந்து ஆலயத்தின் திருப்பணி உயர் வளர்ச்சிக்காகவும் திருவிழாக்களை நடத்துவதற்காகவும், மற்றும் சிரமதானங்கள், அகதிகளாக வந்த மக்களுக்கு தங்கவைத்து உதவிசெய்தல் போன்ற சேவைகளுக்கும் அறங்காவலர்களுடன் ஒன்றுசேர்ந்து தன்னால் இயன்ற பெரும் பணியாற்றி யுள்ளார். மண்டைதீவு முகப்பு வயல் கந்தசுவாமி கோயிலின் தேர்த்திருவிழா உபய காரராகவும் தொடர்ந்து இருந்தார்.

அமரர் ஊரில் நடைபெறுகின்ற திருவிழாக்கள், மங்கள, அமங்கள வைபவங்கள் அனைத்தையும் எனது தந்தையார் போன்று முன்னின்று சைவ மரபுக் கிரியைமுறை தவறாது நடைபெற உதவுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் உறவு முறைப்படி அருணாசலம் செல்லமா தம்பதிகளின் அருமை மகள் அம்பிகை ஆசிரியையே கரம்பிடித்து ஆசைக்கும், அன்புக்கும் ஏழு செல்வங்களைப் பெற்று உயர்கல்வி கற்கவைத்து நல்வழி காட்டினார்.

தனது பதவிக்காலத்தில் நேர்மையாகவும், கடமையுணர்வோடும் சிறந்த சேவையை செய்ததன் பயனாகத் தான் வாழ்ந்த மண்ணுக்கும், சேவைகள் செய்த மண்ணுக்கும் பெருமை சேர்ந்த உத்தமர்.

கற்றதை தம்மோடு மட்டும் வைத்துக்கொள்ளாது ஒளிவு மறைவின்றி உள்ளதை உரைக்கும் பண்பு அவரிடம் இருந்ததை நன்கு அறிவேன்.

சமயத்துக்கும், தன் சமுதாயத்துக்கும் நல்மனம் கொண்டு தொண்டாற்றிய அவரது ஆன்மா இறைவனடி சேர்வது திண்ணம். அன்னார் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்பு மனைவி, ஆசைப்பிள்ளைகள், அருமை மருமக்கள், இனிய பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சுற்றத்தார் அனைவருக்கும் அன்பு நிறைந்த ஆறுதலைக் கூறிக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா திருவெண்காடு சித்திவிநாயகரின் திருவடிகளில் சிவகதி அடைய அவன் தாள் பணிந்து பிரார்த்திப்போமாக!

அன்னாருக்கு எனது ஆழ்ந்த கண்ணீரஞ்சலியையும், காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

**சி.ஆ.சச்சிதானந்தபிள்ளை**

*மஹோற்சவசபை முன்னாள் செயலாளர் (சித்திவிநாயகர் ஆலயம்)*

*இந்து இளைஞர் மன்ற முன்னாள் தலைவர்*

*மண்டைதீவு.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உவப்பத்தலை கூடிய உத்தமன்

திருவாளர் கந்தையா மாணிக்கலிங்கம் அவர்கள் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்) இறையடி சேர்ந்தார் எனும்போது அவருடன் பழகிய காலப்பதிவுகள் எம் மனக்கண்களில் பசுமையாகக் காட்சிதருகின்றது.

தூய வெண்ணிற வேட்டி, நஸனல், தோளில் கதர்சால்வை வெண்ணீற்றுத் திலகம் தரித்து ஆசார சீலராக எங்கள் சைவசமயத்தின் பற்றுதலையும், மகிமையையும், செந்தமிழின் பெருமையையும் மகிழ்விக்கும் தோற்றம்.

இறைவனுக்கு ஒப்பான உன்னத ஆசிரியப்பணியிலே இணைந்து மலையகப்பகுதியிலே கஸ்டப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் கல்வி வளர்ச்சிக்காக முழுமையான அர்ப்பணிப்புடன் சேவையாற்றியிருக்கின்றார் தமிழ்ப்பிரிவை உருவாக்கியிருக்கின்றார். இதனை அன்னாருடைய பழைய மாணவனும், ஓய்வு நிலை அதிபருமாகிய ஓர் அன்பர் தனது அஞ்சலி உரையிலே கூறியதை எமது மண்ணின் பெருமையோடு எண்ணி மகிழ வேண்டிய நிலை அக்கணம் உருவாகியது.

அன்னார் இறுதியாக தனது சொந்த மண்ணிலே யா/மண்டைதீவு ம.வியில் தலைமையாசிரியராகப் பதவியேற்று நல்லாசிரியராக சிறந்த நிர்வாக அதிபராக தனது கடமையை பூரணமாக ஆற்றிப் பூரிப்புடன் ஓய்வு பெற்றவர்.

சிறந்த விவசாயியாக திருவெண்காடனின் திருத்தொண்டனாக விளங்கிய அமரர் அவர்கள் ஆலய வளர்ச்சியில் மிகவும் கரிசனையோடு செயற்பட்டவர். தேர்த்திருப்பணிச்சபையிலே செயலாளராகவும், திருவிழாச் சபையிலே தலைவராகவும் இருந்து அரும்பணியாற்றியவர். திருவெண் காடனின் திருத்தலத்திலே குடும்பரீதியாக இவர்களின் பங்களிப்புக் காணப் பட்டது யாதெனில் அன்னாரின் தமையனார் ஆற்றலும், ஆளுமையும் மிகுந்த அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் ஆலோசனைகளும், வழிகாட்டலும் எமது ஆலய வளர்ச்சிக்கு பெரிதும் உதவியது என்று கூறக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவும், நட்புமாக எம்முடன் இணைந்து புன்னகை பூத்த முகத்துடன் அறிவுக்கு விருந்தாகும் அரிய பல விடயங்களை நாசூக்காக நகைச்சுவை ததும்ப இயம்பிய இலட்சிய விருந்தொன்று விநாயகன் கழல்களில் நித்தியப் பேரின்பம் அடைந்துவிட்டது. பிறப்புண்டேல், இறப்புண்டு நியதியை மாற்ற யாராலும் இயலாது.

உவப்பத்தலைகூடி வாழ்ந்த உத்தமனே உங்களுடன் பழகிய் பசுமையான காலங்கள் இனியவைகளாக என்றும் உள்ளத்தால் அழியா நினைவுகளாக வாழும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல திருவெண்காடு சித்திவிநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

இவ்வண்ணம்

**திரு.பொ.வி.திருநாவுக்கரசு**

**திரு.இரத்தினசபாபதி யோகநாதன்**

**(குருமகர்த்தாக்கள்)**

***திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தானம்***

***மண்டைதீவு - 6***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சால்புடைப் பெரியோன் ஆசான் மாணிக்கலிங்கம்

சைவமும் தமிழும் எம்மிரு கண்கள் என்ற வாழ்வு மண்டைதீவின் பெருமைக்குச் சான்றாகும். இசைவிழாக்கள், திருக்குறள் மாநாடு, பாரதி விழா, முத்தமிழ் விழா, பெருந்தலைவர்கள் கலந்து கொள்ளும் அரசியல் பெருவிழா என்பன 1990 களுக்கு முற்பட்ட மண்டைதீவு பற்றிய பதிவு.

1991களில் எங்கள் மண்ணிலிருந்து வேரறுத்து வெளிக்கிட்ட நாம்; பதிய வைத்த இடத்தில் தழைத்த வேர் வலிமை பெற, தாய் மண் செல்ல முடியாத அளவில் எங்கள் வரலாறும் கள்ளிக் காட்டு இதிகாசம் போலாயிற்று. எனினும் எங்கள் ஊரின் பாசப்பிணைப்புகள் ஒருபோதும் அறுபட முடியாதவை. எங்கள் ஊர்ப் பெரியவர்கள், ஆசிரியத் தெய்வங்கள், கோவில் திருவிழாக்கள், விவசாய முயற்சிகள், பள்ளி வாழ்க்கை என்ற நீள்பார்வையில் எங்கள் கண்முன் தோன்றும் ஆசான் மாணிக்கலிங்கம் அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லை என்ற சோகம் நம் நெஞ்சத்தை நெருடவே செய்கிறது.

மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் நீண்டகாலம் தலைமையாசிரியராகக் கடமையாற்றிய அவர் மண்டைதீவில் நடந்த அனைத்து முன்னேற்றகரமான நிகழ்வுகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர். மண்டைதீவில் நடந்த இசைவிழாக்கள், தமிழ் மறைக் கழகத்தின் ஏற்பாட்டில் 1982ல் நடந்த இருபத்திரண்டாவது திருக்குறள் மாநாடு என்பவற்றில் ஆசான் மாணிக்கலிங்கத்தின் வகிபங்கு காத்திரமானது.

மண்டைதீவு மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்த அமரர் சு.சண்முகநாதன் அவர்கள் திருக்குறள் மாநாட்டின் தலைவராக இருந்தார். மாநாட்டின் பேச்சாளர்களை ஒழுங்குபடுத்தல், மலர் வெளியீடு என அனைத்திலும் மாணிக்கலிங்கம் அவர்கள் பெரும் பங்காற்றியதால் மண்டைதீவு மகா வித்தியாலயமே திருக்குறள் மாநாட்டை நடத்தியதான பெருமையையும் கௌவரத்தையும் பெற்றது.

1983ம் ஆண்டில் 23வது திருக்குறள் மாநாடு கோப்பாயில் நடந்த போது மாணவர்களுக்கிடையேயான திருக்குறள் போட்டி மாவட்ட மட்டத்தில் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. அந்த போட்டிக்கு ஆசான் மாணிக்கலிங்கம் அவர்கள் என்னைக் கூட்டிவந்து போட்டியில் கலந்து கொள்ள வைத்ததை, அதன் பின்னர் கந்தர்மடம் இந்துமகளிர் ஒழுங்கையில் இருந்த அதிபர் சண்முகநாதனின் வீட்டிற்கு என்னை கூட்டிச் சென்றதை எல்லாம் ஒருகணம் நினைக்கும் கால் கன்னத்தின் ஓரங்கள் நனையவே செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டைதீவு மகா வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் வெள்ளிக்கிழமை தோறும் தலைமை ஆசிரியர் மாணிக்கலிங்கம் அவர்களின் நற்சிந்தனைக்குக் குறைவே இல்லை. அவரின் பேச்சாற்றல், சபையைக் கவரும் மொழித்திறன், நகைச்சுவைப் பாங்கு என்பன மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெரிதும் ஈர்த்தன. மண்டைதீவு திருவெண்காட்டு சித்தி விநாயகர் மீது ஆராத பக்தி கொண்ட மாணிக்கலிங்கம் அவர்கள் ஆலயத்தின் அறங்காவலர்களுக்கு பெருந்துணையாக இருந்து ஆலய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார்.

மண்டைதீவின் நுழைவாயிலில் வீற்றிருந்து எங்கள் தனி வழிப்பயணத்தின் போது வழித்துணையாக எங்களோடு கூட வரும் வழிப்பிள்ளையாருக்கு வருடத்தில் ஒருநாள் பொங்கல் திருநாள் இடம்பெறும். இராப்பொழுதில் நடைபெறும் அந்தப் பொங்கல் திருவிழா ஆசான் மாணிக்கலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறும். பொங்கல் நிறைவுற அதிகாலை ஒரு மணி ஆகிவிடும். ஆனாலும் அந்தப் பெருவெளியில் வருடத்தில் ஒருநாள் நடைபெறும் சாமத்துப் பொங்கல் மீது வழிப் பிள்ளையாருக்கு அளவு கடந்த விருப்பம் என்பதால் தான்; அந்த வழியால் வந்த வினையெல்லாம் அறுபட்டுப் போனது. வழிப்பிள்ளையாரின் வருடாந்தப் பொங்கலை முன்னின்று நடத்திய ஆசான் மாணிக்கலிங்கம் அவர்களின் சமூக அக்கறை பற்றி இவ்விடத்தில் சிந்திக்காமல் இருந்து விட முடியாது.

1987ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 04ம் திகதி மண்டைதீவு திருமுறைக் கழகத்தை ஆரம்பித்த போது கழகத்தின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அவரின் வீட்டிற்குச் சென்று அவரின் மாணவர்களாகிய நாம் கேட்ட போது, அதனை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட பெருந்தகை அவர்.

வள்ளுவன் கூறும் "சால்பு" அனைத்தும் ஒருங்கே பொருந்திய ஆசான் மாணிக்கலிங்கம் அவர்கள் இந்த மண்ணில் 92 ஆண்டுகள் நிறைவாழ்வு வாழ்ந்தவர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அவரின் புனித ஆத்மா எல்லாம் வல்ல திருவெண் காட்டுச் சித்தி விநாயகனின் திருவடிகளில் நித்திய பேரின்பம் பெற அவன் தாள் வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி!

**நல்லையா விஜயசுந்தரம்**
*பிரதம ஆசிரியர், வலம்புரி நாளிதழ்*
*அதிபர், யா/பரமேஸ்வரா வித்தியாலயம்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சக ஆசிரியர் திருமதி கேதாரகௌரி செல்வராஜா அவர்களின் தந்தையார் 24.04.2014(புதன் கிழமை)அன்று K.U. வீதி, கந்தரோடை, சுன்னாகத்தில் காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொ/ விவேகானந்தா கல்லூரி,
ஆசிரியர் நலம்புரி சங்கம்



## கண்ணீர் அஞ்சலி

மண்டைதீவு திருமுறைக் கழகத்தின் தலைவர்
**உயர்திரு கந்தையா மாணிக்கலிங்கம்**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

**திருமுறைக்கழகம்**
**மண்டைதீவு**

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
கந்தையா
மாணிக்கலிங்கம்

யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் உபஅதிபர் மா.திருலிங்கம் அவர்களின் அன்பு தந்தையார் அமரர் கந்தையா மாணிக்கலிங்கம் அவர்கள் கடந்த(24.04.2014) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்
யா/ பண்டத்தரிப்பு இந்து கல்லூரி

## கண்ணீர் அஞ்சலி



**கந்தையா**
**மாணிக்கலிங்கம்**

*(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)*

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் முன்னாள் திருவிழாச் சபைத் தலைவரும், தேர்த்திருப்பணிச் சபையின் செயலாளரும், ஆலயத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டவருமாகிய கந்தையா மாணிக்கம் (ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்) அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்மா சாந்தி அடைய திருவெண்காட்டுப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

*திருவெண்காட்டுச் சித்திவிநாயகர்*
*தேவஸ்தானம், மண்டைதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் மலர்தூவல்

**மலர்வு**

**09 . 03 . 1922**



**உதிர்வு**

**24 . 04 . 2014**

அமரர்

## திரு. கந்தையா மாணிக்கலிங்கம்

**(ஓய்வுபெற்ற அதிபர்)**

எமது கல்லூரியின் ஆசிரியை செல்வி. கேதார நாயகியின் அன்புத் தந்தையும், யாழ் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய அமரர் திரு.கந்தையா மாணிக்கலிங்கம் அவர்களின் மறைவால் கலங்கிநிற்கும் எமது சகோதரி கேதார நாயகிக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**துயரத்துடன்...**

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**

**கொ/சேர் ராஸிக் பரீத் பெண்கள் கல்லூரி,**
**கொழும்பு - 15.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | மறைவு |
|---|---|---|
| 09 - 03 - 1922 |  | 24 - 04 - 2014 |

மண்டைதீவு திருமுறைக்கழகத் தலைவர்

## உயர்திரு கந்தையா மாணிக்கலிங்கம்

[ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் மண்டைதீவு .ம.வி.]

*ஆசான் மாணிக்கலிங்கம்*
*அமரனடி சேர்ந்தார் என்ற செய்தி*
*காற்றோடு கலந்த போது*
*ஏங்கிப்பதறியது நமதுள்ளம்*
*நேற்றுப் போல் இருக்கிறது*
*அவர் தலைமை ஏற்று நடத்திய*
*திருமுறைக்கழகத்தின் விழாக்கள்*
*ஓ! நம் தாய் மண்ணில்*
*வேர் அறுத்து வெளிக்கிட்ட பின்*

*திருமுறைக்கழகத்தில் இருக்கின்ற*
*பொக்கிசம் எங்கள் ஆசான்*
*மாணிக்கலிங்கம் என்றிருந்தோம்*
*இன்று அவரும் இல்லை என்றபோது*
*என் செய்வோம் ஐயனே!*
*திருவெண்காட்டான் திருவடியில்*
*நித்திய பேரின்பம் பெறுகவென*
*வேண்டுகின்றோம் இறைவன் தாளை*

*அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



27-04-2014

திருமுறைக்கழகம்
மண்டைதீவு.

அச்சமைப்பு: மதி கலர்ஸ், நல்லூர் 021 2229285



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்




என்றென்றும் எம் நன்றி

எமது குடும்பத் தலைவர் இயற்கை எய்திய தகவலறிந்து
உடன் வந்து உதவியோருக்கும் இறுதிக் கிரியைகள்
நடைபெற உதவிய நண்பர்கள், உறவினர்களுக்கும்,
தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்,
மலர்வளையம் வைத்து அஞ்சலித்தோருக்கும்
அஞ்சலி பிரசுரம் வெளியிட்டும், பத்திரிகையில் அஞ்சலி
பிரசுரித்தோருக்கும், இறுதி நிகழ்வில் இரங்கலுரை
நிகழ்த்தியோருக்கும், நிகழ்வில் நேரில் கலந்து அஞ்சலி
செலுத்தியோருக்கும், இறுதி ஊர்வலம் தகனக் கிரியைகளில்
கலந்து கொண்டோருக்கும் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்தியத்தில்
பங்குபற்றியோருக்கும் மனமார்ந்த நன்றியை
தெரிவித்துக்கொள்கிறோம்.


கந்தையா உபாத்தியாயர் வீதி,
கந்தரோடை,
மோதரை,
கொழும்பு - 15

இங்ஙனம்
குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்"



**இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.**

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -**

MATHI COLOURS
Nallur 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org